08.07.2026 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.114/2021 ) திரு.பாஸ்கர் ஜேசுதாஸ்.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

1) நான் எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் செட்டிகுறிச்சியில் குடியிருந்து வருகிறேன். வழக்கில் உள்ள வீடு எனது வீடா என்றால் ஆமாம். எனது வீடு என்பதை காட்டக்கூடிய எனது பெயரில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்றால் எனது பெயரில் பத்திரம் இல்லை. வேறு யார் பெயரில் பத்திரம் இருந்தது என்றால் எனது அப்பாபெயரில் இருந்தது. எத்தனை பத்திரங்கள் என்றால் 2 பத்திரங்கள் இருந்தது. 3 பத்திரங்கள் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்கள் எனது தந்தை பெயரில் அவர் கிரையம் பெற்றதாகதான் உள்ளதுஎன்றால்சரிதான். பி.வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆவணங்களும் முறையே 1961, 1972,1984 என்றால் சரிதான். எனது அப்பா,அம்மாவும் என்ன வேலை பார்த்தார்கள் என்றால் இருவரும் ஆசிரியராக பணிபுரிந்து வந்தார்கள். நான்என்ன படித்துள்ளேன் என்றால் டிப்பளமோ,மெக்கானிக்கல் எஞ்சினியரிங். எந்த ஆண்டு படிப்பை முடித்தேன் என்றால் 1980 ஆம் ஆண்டு. 1980 ல் படிப்பு முடித்து எந்த ஆண்டு வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 1981 ல் வேலைக்கு சேர்ந்தேன். எந்த நிறுவனத்தில் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் கோவை லட்சுமிமில்லில் மிசனரி மேனுபேச்சரிங் நிறுவனத்தில் பணிக்குசேர்ந்தேன். நான் 1981 ல் வேலைக்கு சேருவதற்குரிய ஆவணத்தை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் மொத்தம் 3 பேர்கள் நான் எனது அக்கா,எனது தம்பி ஆகியோர்கள். கோயமுத்துரில் இருக்கும் வீடு யார் வாங்கினார்கள் என்றால் எனது அப்பா பெயருக்கு தான் வாங்கப்பட்டது. அதன் பின்னர் எனது அப்பா எனது பெயருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் ஆமாம். அதை நான் எனது மனைவியின் பெயருக்கு எழுதிவைத்து விட்டேன் என்றால் இல்லை. எனது தகப்பனார் எங்கு வைத்து இறந்துபோனார் என்றால் எனது தம்பி வீடான சென்னையில் வைத்து இறந்து போனார். நான் எனது தகப்பனாரை பராமரிக்காததால் தான் எனது தம்பி சென்னையில் வைத்து பராமரிப்பதற்காக அழைத்து சென்றார் என்றால் கோயமுத்துாரின் கிளைமேட் எனது தந்தைக்கு ஒத்துக்கொள்ளாததால் எனது தம்பியின் வீட்டில் கொஞ்ச காலம்

இருக்க வேண்டுமென்றும் சிறப்பான மருத்துவ சிகிட்சைக்காகவும் சென்னை சென்றார்.

2) எனது பிராதில் எனது தகப்பனாரை எனது சகோதரி வற்புறுத்தி அழைத்து சென்றதாக சொல்லப்பட்டுள்ளது எது உண்மை என்றால் எனது அக்காவும்,தம்பியும் தான் அழைத்து சென்றார்கள். எனக்கு சட்ட அறிவிப்பு வரப்பட்டதா என்றால் ஆமாம். அந்த அறிவிப்பில் தாவா வீட்டின் சாவியை சண்முகையாவிடமிருந்து நான் பலவந்தமாக பெற்றுள்ளேன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் வீட்டு சாவியை சண்முகையாவிடம் ஒப்படைக்க சொல்லப்பட்டியிருந்தது. அந்த அறிவிப்பின்படி நான் சாவியை தற்போது வரை சண்முகையாவிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்புக்கு எனது தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். நான் கொடுத்த பதில் அறிவிப்பினை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நான்பதில் அறிவிப்பு கொடுத்தாக சொல்லுவது பொய் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் நான் ஒரு தனிபுகார் 1ம்பிரதிவாதி ஒரு தனி புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி கொடுத்த புகார் மனுவிற்கு முதலில் புகார் மனு ஏற்பு ரசீது வழங்கப்பட்டது என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவிற்கு 2 வதாக புகார் மனுஏற்பு ரசீது வழங்கப்பட்டது என்றால் சரிதான். 2 புகார் மனுவையும் சேர்த்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். எனது புகார் மனுவில் என்ன சொல்லியுள்ளேன் என்றால் 30 பவுன் நகையும்,வெங்கலப்பாத்திரங்கள் 3 லட்சம் பெறுமானதையும், மரச்சாமான்கள் 3 லட்சம் பெறுமானதையும் எடுத்துச்சென்றதாக கொடுத்துள்ளேன். 1ம்பிரதிவாதி தாவா வீட்டின் சாவியை ஒப்படைக்ககேட்டு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். விசாரணையில் என்ன ஸ்டேட்மெண்ட் கொடுத்தேன் என்றால் எடுத்துசென்ற பொருட்களை கொடுத்தால் சாவியை கொடுத்து விடுவதாக சொல்லியுள்ளேன். தற்போது காண்பிக்கப்படும் ஆவணம் பி.வா.சா.ஆ.5 நான்காவல் நிலையத்தில் கொடுத்த ஸ்டேட்மெண்ட் என்றால் சாட்சி படித்துப்பார்த்துவிட்டு இதுதான் என்று கூறுகிறார். பி.வா.சா.ஆ.5 எனது ஸ்டேட்மெண்ட்டில் 30 சவரன் நகையை எடுத்து சென்றதாக மிகைப்படுத்தி கொடுத்தாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான் காவல் நிலையத்தில் எனக்கு படித்துப்பார்க்க அவகாசம் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.5 ஸ்டேட்மெண்ட்டில்

பொருட்களை ஒப்படைத்துவிட்டதாக வீட்டின் சாவியை ஒப்படைப்பதாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஸ்டேட்மென்டின்படி அன்றைய தினம் காவல் நிலையத்தில் தாவா வீட்டின் சாவியை ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரிதான்.

3) அதே போன்று பிரதிவாதிகள் எஸ்.வி.எல்.பேக்கர்ஸ் அன்ட் மூவர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலமாக 15.03.2021ம் தேதி பொருட்ளை எனக்கு அனுப்பி வைத்து விட்டார்கள் என்றால் சரிதான். சாட்சி தானாக அனுப்பிவைத்த பொருட்களை தங்க நகையோ, பட்டுபுடவையோ, விலை உயர்ந்த பித்தளை பாத்திரங்களோ வரவில்லை.பி.வா.சா.ஆ.7 அவர்கள் அனுப்பி வைத்தற்கான பொருட்களுக்கான ரசீது என்றால் சரிதான். நான் மேற்படி பொருட்களை வரவில்லை என்று காவல்நிலையத்தில் புகார் மனுவோ, வழக்கறிஞர் மூலமாக அறிவிப்போ கொடுத்தேனா என்றால் வாய்மொழியாக காவல் நிலையத்திற்கு சென்று சொல்லியுள்ளேன். அது நான் சொல்லுவது போல் உண்மையில்லை என்பதால் தான் நான் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. தபசில் சொத்தை எனது தகப்பனார் 1ம்பிரதிவாதிக்கு நன்கொடை ஆவணம் பிறப்பித்துக்கொடுத்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது தந்தை எழுதிக்கொடுத்த நன்கொடை ஆவணத்தின் அடிப்படையில் தாவாச்சொத்து 1ம்பிரதிவாதிக்கு தான் பாத்தியம் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி தான் தற்போது வரை தாவா வீட்டிற்கு தீர்வை செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாவாச்சொத்தில் பாத்தியம் என்று பரிகாரம் கோரவில்லை என்றால் பொருளை கொடுத்தால் நான் வீட்டை விட்டு வெளியேறுகிறேன். நான் எனது வழக்கில் சட்டப்படியான முறையில் இல்லாமல் என்னை வெளியேற்றக்கூடாதென்று தாவாச்சொத்தை வில்லங்க விற்கிரையம் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் ஆனால் பொருளையும் கேட்டியிருந்தேன் அது பிராதில் அடிக்கப்பட்டுள்ளது. எனக்குபாத்தியப்படாத சொத்தில் குடியிருப்பதற்கு எனக்கு உரிமைகிடையாது என்றும் நான் அதுபோன்று குடியிருப்பது ஆக்கிரப்பாகும் என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் நான் பயன்படுத்தி வருவதால் அதற்கு நஷ்டயீட்டு தொகைாய மாதம் ரூ.5,000/-வீதம் ஜுலை 2021 முதல் செலுத்த கடமைப்பட்டுள்ளேன் என்று பிரதிவாதி தரப்பில் பரிகாரம் கோரியுள்ளார்கள் என்றும், எனது வழக்கு தள்ளுபடி செய்து எதிர்கோரிக்கை அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.07.2026.